**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.125/2011**

தேதி . 03.09.2021

பெயர் . சதாசிவம்

த/பெ . புல்லம்ம நாயுடு

வயது . 67

வா.சா. 1

**குறுக்கு விசாரணை**

எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்துள்ளேன் ஏவ்வளவு பாகம் கேட்கிறேன் என்றால் 1/2 பாகம் கேட்கிறேன். பிரதிவாதி வெலூரில் உள்ள KDN சிமெண்ட் தொழிற்சாலையில் வேலை செய்தார் என்றால் தெரியாது. எனக்கு தெரியும் ஆனால் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி KDN சிமெண்ட் தொழிற்சாலையில் வேலை செய்த அனுபவத்தை கொண்டு சொந்தமாக சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்க கேட்டார் என்றால் இல்லை. வழக்கு சொத்து எப்போது வாங்கினேன் என்றால் கடந்த 28.3.2007ல் வாங்கினேன். நான் வழுக்கு சொத்தை வாங்கும் போது வழக்கு சொத்தில் சிமெண்ட் தொழிற்சாலைக்கு தேவையான இயந்திரங்கள் இருந்தது என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் வழக்கு சொத்தில் சிமெண்ட் தொழிற்சாலைக்கு தேவையான இயந்திரங்கள் இருந்தது என்றால் இல்லை. வழக்கு சொத்தை வாங்கிய பிறகு நானும் பிரதிவாதியும் வழக்கு சொத்தில் கடந்த 7.8.2007ல் கூட்டாக தொழில் செய்ய கூட்டண்மை (partnership deed) பத்திரம் போட்டோம் (தற்போது என்னடம் காட்டி) என்றால் இல்லை. கடந்த 31.8.2007ல் தொழில் கூட்டு பதிவு Registration of Partnership firm) கஞ்சிபுரத்தில் செய்யப்பட்டது என்றால் இல்லை. தற்போது என்னடம் காட்டி நானும் பிரதிவாதியும் சேர்ந்து தான் பதிவு செய்தோம் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் இல்லை. நானும் பிரதிவாதியும் வழக்கு சொதததை வாங்கிய பிறகு இரண்டு கட்டிடங்கள் கட்டினோம் என்றால் ஒரு கட்டிடம் தான் கட்டினோம். வழக்கு சொத்தில் கட்டிடம் கட்டிய பிற்கு மருவத்தூர் ஆதிபராசக்தி சிமெண்ட் தொழிற்சாலை என்ற பெயரில் நானும் பிரதிவாதியும் ஆரம்பித்தோம் என்றால் இல்லை. கடந்த 10.8.2007ல் வழக்கு சொத்தில்

மருவத்தூர் ஆதிபராசக்தி சிமெண்ட் தொழிற்சாலை இருப்பதற்காக Department of industries and commerce ஒப்புதல் அளித்த படிவம் (தற்போது என்னிடம் காட்டி) என்றால் இல்லை. இந்த விவசயமும் எனக்கு தெரியும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் இல்லை. வழக்கு சொத்தை இருவரும் சேர்ந்து கூட்டாக தொழில் செய்ய தான் வாங்கினோம் என்றால் இல்லை. (தற்போது என்னிடம் காட்டி) வழக்கு சொத்தில் மருவத்தூர் ஆதிபராசக்தி சிமெண்ட் தொழிற்சாலைக்கான வங்கி கணக்கு STATE BANK OF IDNIA திறக்கப்பட்டது என்றால் இல்லை. (தற்போது என்னிடம் காட்டி) மின்சார இணைப்பு பெறுவதற்காக முருக்கம்பட்டு ஊராட்சி மன்ற வழங்கிய சான்று ( என்றால் இல்லை. (தற்போது என்னிடம் காட்டி) வழக்கு சொத்திற்காக வீட்டு வரி ரசீது என்றால் இல்லை போலியானது. எனக்கு அனைத்தும் தெரியும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் இல்லை. நானும் பிரதிவாதி வழக்கு சொத்திற்காக (partnership deed) போட்ட இது நாள் வரை ரத்து செய்ய வில்லை என்றால் அப்படி (partnership deed) போடவில்லை. நான் கூட்டண்மையை கலைக்க பிரிவு 69(3)ன் படி தான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்தது தவறு என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் பழைய சர்வே எண்.202/5, மற்றொரு பழைய சர்வே எண் 202/6. வழக்கு சொத்தின் மொத்த விஸ்திரணம் எவ்வளவு என்றால் 80 சென்ட். வழக்கு சொத்தை வாங்குவதற்கு மொத்த பணமும் பிரதிவாதி தான் கொடுத்தார் என்றால் இல்லை நானும் கொடுத்தேன். அவ்வாறு பணம் கொடுக்க எனக்கு வசதி இல்லை என்று பிரதிவாதி கூறுகிறார் என்றால் இல்லை எனக்கு வசதி உள்ளது. பிரதிவாதி கூட்டாக தொழில் செய்ய நம்பகமான நபர் தேவை என்பதற்காக தான் என்னை அனுகினார் அதற்காக தான் என்னை கிரைய பத்திரத்தில் சேர்த்து கொண்டர் என்றால் இல்லை. வழக்கு சொத்தில் கட்டிடம் கட்ட மற்றும் இயந்திரங்கள் வாங்க பிரதிவாதி தான் முழு செலவு செய்தார் என்றால் இல்லை கட்டிடம் கட்ட நானும் பணம் கொடுத்தேன் வழக்கு சொத்தில் இயந்திரங்கள் இல்லை வாங்கயும் இல்லை. அவ்வாறு வழக்கு சொத்திற்காக அனைத்து வாங்கப்பட்டது வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால் இல்லை. வழக்கு சொத்தை வாங்கயதிலிருந்து பிரதிவதி தான் சிமெண்ட் தொழிற்சாலை நடத்தி அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை தொழிற்சாலை

இல்லை. தற்போதும் கூட தொழிற்சாலை இல்லை வழக்கு சொத்தில் தற்போதும் அதற்கு முன்பு சிமெண்ட் தொழிற்சாலை இயங்கி வருகிறது அந்த விசயம் எனக்கு தெரியும் பொது மக்களுக்கும் தெரியும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் இல்லை. வழக்கு சொத்தில் தற்போது 60% கட்டிடம் உள்ளது என்றால் இல்லை ஒரே ஒரு கட்டிடம் தான் உள்ளது. வழக்கு சொத்தில் பிரதிவாதி தான் தண்ணீர் வசதிக்காக போர் போட்டார் என்றால் இல்லை நான் தான் வழக்கு சொத்து வாங்கிய பிறகு ஆழ்துளை கிணறு போட்டேன். வழக்கு சொத்தில் வழக்கு சொத்தில் மாசுகட்டுப்பாடு வாரியம் மரங்கள் இருந்தால் தான் சான்றிதழ் வழங்கப்படடும் என்று கூறியதால் நானும் பிரதிவாதியும் மரங்களை நட்டோம் என்றால் இல்லை. வழக்கு சொத்தில் இடத்தை மட்டும் தான் பாகம்ப்பிரிவினை கேட்கிறேன் இயந்திரங்கள் மற்றும் கட்டிடங்கள் பொறுத்து பாகம் கேட்கவில்லை என்றால் இயந்திரங்கள் வழக்கு சொத்தில் இல்லை இடத்தை மட்டும் தான் பாகத்தை கேட்கிறேன். வழக்கு சொத்தில் இயந்திரங்கள் கட்டிடங்கள் உள்ளது நான் ஏன் அதில் பாகம் கேட்கவில்லை என்றால் நான் பெயர் அளவில் பங்குதாரர் என்பதால் தான் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நானும் பிரதிவாதியும் சேர்ந்து தான் இயந்திரங்கள் வாங்கி கட்டிடங்கள் சிமெண்ட் தொழிற்சாலை பிரதிவாதி நடத்தி வருகிறார் ஆனால் தற்போது பாகப்பிரிவினை செய்தால் பிரதிவாதிக்கு பெறுத்த நஷ்டம் ஏற்படும் என்றால் சரியல்ல. பிரதிவாதி பெயர் அளவில் என்னை தரப்பினராக சேர்த்ததை பயன்படுத்தி நான் வழக்கு சொத்தில் பாகம் கேட்ப்பது தவறு என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பிறகு வழக்கு சொத்தில் ஒரு பகுதியை தேசிய நெடுஞ்சாலை கையகபடுத்தி கொண்டது என்றால் சரிதான். எவ்வளவு கையகப்படுத்தப்பட்டது என்றால் புதிய சர்வே எண் 202/6ஏ 16 1/4 சென்ட். கையகப்படுத்தியது போக மீதி எவ்வளவு உள்ளது என்றால் 202/6பி யில் 22.75 சென்ட் உள்ளது மற்றும் 202/7பி யில் 26 சென்ட் உள்ளது. தேசிய நெடுஞ்சாலை கையகபடுத்தியது போக மீதி சொத்தில் தான் பாகம் கேட்கிறேன் என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலை கையகபடுத்திற்கான நஷ்ட ஈட்டை நான் வாங்கவில்லை. என்ன காரணத்திற்கு நஷ்ட ஈட்டை வாங்க முடியவில்லை என்றால் வழக்கு சொத்திற்கு பட்டா கேட்கிறார்கள் வழக்கு சொத்தின் பட்டா விற்பனை செய்தவரின் பெயரில் உள்ளது என் பெயரில் மாற்றவில்லை. நான் சொல்வது தவறு தேசிய நெடுஞ்சாலை கையகபடுத்திய பிறகு என் பெயரிலும் பிரதிவாதி பெயரிலும் பட்டா மாற்றப்பட்டது நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்கு சொத்தில் கட்டிடம் மற்றும் இயந்திரம் மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை வழக்கு சொத்தில் அவ்வாறு இயந்திரங்கள் இல்லை. வழக்கு சொத்தின் மதிப்பு அதிகம் அதை மறைத்து இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளதால் அதன் அடிப்படையில் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கை உரிய பரகாரங்களை கொண்டு தாக்கல் செய்யாததால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**நீதிமன்ற அனுமதியோடு மறு விசாரணை செய்யப்படுகிறது**

பிரதிவாதி தாக்கல் செய்த கூடுதல் பதிலுரையில் சொல்லியுள்ள படி (partnership act பிரிவு 69(3) படி வழக்கு நிலைக்கத்தக்கத்தல்ல என்று சொல்லியுள்ளது தவறு

**குறுக்கு விசாரணை**

கூடுதல் பதிலுரை தாக்கல் செய்த பிறகு நான் கூடுதல் பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்யவில்லை.

**மறு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**